★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 5563

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 3உ சனி (18—8—56) ★ ★ வெளியூர்: ஆவணி 4உ ஞாயிறு (19—8—56) [இதழ் 59

ரூ. 182,85,00,000 வருமானவரி பாக்கியாம்!

★

புதுடில்லி, ஆக. 17—

கடந்த மார்ச் திங்கள் 31-ந்தேதி முடிய, மத்திய சர்க்காருக்கு, வரவேண்டிய 'வருமான வரியில்' ரூ. 182,85,00,000 பாக்கியாக இருப்பதாக, மக்கள் சபையில் அமைச்சர் எம். சி. ஷா அறிவித்திருக்கிறார்.

தாமோதர் பள்ளத்தாக்கு திட்ட நிர்வாக ஊழல்

ஒப்பந்தப் புள்ளி பெருமல் ரூ. 7.4 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது

சேர வேண்டிய பணத்திற்குக் கூடுதலாகத் தரப்பட்டிருக்கிறது

பம்பாய் நிறுவனத்திற்குக் காட்டிய சலுகை அம்பலம்

பொதுக்கணக்குத் தணிக்கைக் குழுவின் பலத்த கண்டனம்

புதுடில்லி, ஆக. 16—

"தாமோதர் பள்ளத்தாக்கு நிறுவனத்தின் விவகாரங்களை ஆராய்ந்து பார்த்த பிறகு, ஒப்பந்தப் புள்ளி பெருது ஆற்றியுள்ள பணியை மேற்கொண்டுள்ள நற்கான நியாயத்தை வலியுறுத்துவதற்கு எந்தவித அவசியமும் இருக்கவில்லை என்ற முடிவை தணிக்கைக் குழு கொள்ளுகிறது. எனவே, இந்த ஊழலுக்குப் பொறுப்பானவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் குழு விழைகிறது."

இவ்வாறு, பொதுக்கணக்குத் தணிக்கைக் குழு, தாமோதர் பள்ளத்தாக்கு நிர்வாக ஊழல் பற்றி ஆராய்ந்து உருவாக்கியுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. அவ்வறிக்கை மக்கள் சபையில் வைக்கப்பட்டு இருக்கிறது. அவ்வறிக்கையில், பின்கண்ட சிபாரிசும் சேர்க்கப்பட்டு இருக்கிறது:—

"கள்ளமுறைகளினல் சேமித்து வைக்கப்பட்டுள்ள பொருட்கள், களவாடப்படுவதிலிருந்து தடுப்பதற்காகத் திறமையான வகையில் சேமிப்புக் கணக்குகளை வைத்திருக்க வேண்டும்."

குழுவின் தணிக்கை அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"ஏற்கனவே 1951 — 52, 52—53-ம் ஆண்டுகளில் ரூ. 4·5 - இலட்சம் வரையில் ஒழுங்காகக் கணக்குக் காட்டாது இருந்துவிட்ட நிர்வாக எஞ்சினியர், கல் வழங்கும் அதிகாரி ஆகிய இருவர் மீதும், தாமோதர் பள்ளத்தாக்கு நிறுவனம் எந்தவித நடவடிக்கையை மேற்கொண்டு இருக்கிறது என்பதையும் அறிவிக்க வேண்டும்.

"திட்டத்தின் காரணமாக இடத்தையும் கட்டிடங்களையும் இழந்தவர்களுக்கு ஈடு செய்வதற்காக வாங்கப்பட்ட இடங்களையும் வீடுகளையும், இடம் பெயர்ந்தவர்கள் ஏற்றுக்கொள்ளாததால், அவ்வகையில் நிறுவனம் ரூ. 18 இலட்சம் செலவிட்டுள்ளது வருந்தத்தக்கதாகும்.

"'நிலத்துக்கு ஈடாக நிலம்', 'வீட்டுக்குப் பதிலாக வீடு' என்ற வகையில் இடம் பெயர்ந்தவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து பணமாக நஷ்டஈடு பெறும் நிலை ஏற்பட்டால், இவ்வகையில் தாம் செலவிட்ட தொகையை பீகார் அரசாங்கம் திருப்பித் தந்துவிட வேண்டும் என, அந்த அரசாங்கத்திடம் வேலையைத் துவங்குவதற்கு முன்னதாகவே நிறுவனம் வாக்குறுதி பெற்று செயல்பட்டு இருக்கவேண்டும்.

"கோனர் அணைக்கட்டில் சில வேலைகளை மேற்கொண்ட இனத்தில், சேரவேண்டியதற்குக் கூடுதலாக 'இந்த் பட்டேல்' கம்பெனிக்குக் கொடுத்துள்ள கூடுதலான தொகையை மேலும் காலம் தாழ்த்தாது உடனடியாக வசூலித்தாக வேண்டும். அவ்வாறு கூடுதலாகக் கொடுக்கப்பட்டுள்ள தொகையை நிர்ணயிப்பதற்கு மூன்றுவது ஆய்வுக் குழு ஒன்றை நியமித்திருப்பது கண்டிக்கத்தக்கதாகும்.

"தாமோதர் பள்ளத்தாக்கு நிறுவனத்தின் சார்பிலேயே நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு, இவ்வாறு மிகுதியாகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 119 இலட்சமாகும் எனக் கணக்கிட்டு இருக்கிறது. ஆனல் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த இரண்டு நிபுணர்களோ, அதிகப்படியாகக் கொடுத்துள்ள தொகை முறையே ரூ. 94 - இலட்சம்—ரூ. 114 இலட்சம் எனக் குறிப்பிட்டிருக்கிருர்கள்.

மாவட்ட காங்கிரசிற்கும் பிரதேசக் காங்கிரசிற்கும் பிணக்கு

அபேட்சகர்களைப் பொறுக்குவதில் பிரதேசக் காங்கிரசின் எதேச்சாதிகாரம்

மத்திய பாரத் மாநிலக் காங்கிரசில் கொந்தளிப்பு

இந்தூர், ஆக. 17—

மத்திய பாரத்தில் உள்ள மாவட்ட காங்கிரஸ் குழுக்கள் சிபாரிசு செய்த அபேட்சகர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ள முடியாது என பிரதேச காங்கிரஸ் குழு ஒதுக்கித்தள்ளிவிட்டது. செப்டம்பர் 20-ந் தேதிக்குள் புதிய அபேட்சகர்கள் மனுச் செய்து கொள்ள வேண்டும் எனவும் அறிவித்திருக்கிறது.

ஒவ்வொரு மாவட்ட காங்கிரஸ் பிரதிநிதியும், தங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த பலரின் பெயர்களைச் சிபாரிசு செய்திருப்பதுடன், பிற மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பெயர்களையும் சிபாரிசு செய்திருப்பதினலேயே, பிரதேசக் காங்கிரஸ் குழு, மேற்குறித்தவாறு நடந்து கொள்ள வேண்டியதாயிற்று எனக் கூறப்படுகிறது.

இராஜ்ய சட்டசபையின் 99 இடங்களுக்கு 200 நபர்கள் சிபாரிசு செய்யப்பட்டும், 11 மக்கள்சபை இடங்களுக்கு 30 நபர்கள் சிபாரிசு செய்யப்பட்டும் இருப்பதாக பிரதேச தேர்தல் குழு குறிப்பிட்டிருக்கிறது.

பஞ்சாயத்து, நகரசபை, சட்டசபை உறுப்பினர்கள் பதவி விலகல்

10,00,000 கையெழுத்துக்கள் கொண்ட 'மகஜர்' தயாரிக்கப்படுகிறதாம்

பம்பாய் இருமொழி மாநில அமைப்புக்கு எதிர்ப்பு

பெரிய பம்பாய் இருமொழி மாநில அமைப்பை எதிர்த்தும், தனி குசராத் மாநில அமைப்பைக் கோரியும், மகாகுசராத் வித்தியார்த்தி சமிதி, பிரஜா சோசலிஸ்டுக் கட்சி, மற்றும் பல திறப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த பலர், 10,00,000 கையெழுத்துக்களடங்கிய 'மகஜர்' ஒன்று தயாரிப்பதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

வருகிற 20-ந் தேதியன்று ஆரம்பிக்கப்பட இருக்கும் மாநிலங்கள் சபைக் கூட்டத்தின்போது, இந்தக் கையெழுத்து மகஜர்,' சபைத் தலைவரிடம் கொடுக்கப்பட இருப்பதாகவும் கூறப்படுகிறது.

கூட்டம் துவக்கப்படுகிற அன்று தான், மாநிலங்கள் சபையில், மாநிலப் புனரமைப்பு மசோதா விவாதிக்கப்பட இருக்கிறது.

இருமொழி பம்பாய் மாநில அமைப்பை எதிர்த்தும், அகமதாபாத்திலும் மற்றும் பல இடங்களிலும் நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிப் பிரயோகங்களுக்குத் தங்கள் கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

'எங்களுக்கு மகா குசராத் வேண்டும்'

மக்கள் சபை முடிவு மதிப்பிழக்கிறது

காங்கிரஸ் மேலிடத்தின் தீர்ப்பு மீறப்படுகிறது

அமிர்தசரஸ் தீர்மானம் அலட்சியப்படுத்தப்படுகிறது

'மகா குசராத்' தேவை என அகமதாபாத் நகர காங்கிரஸ் குழு தீர்மானம்

அகமதாபாத், ஆக. 17—

இருமொழி பம்பாய் மாகாண ஏற்பாட்டு முடிவை மாற்றிக் கொள்ளும்படி, காங்கிரஸ் செயற்குழுவைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை அகமதாபாத் நகர காங்கிரஸ் குழு நிறைவேற்றி இருக்கிறது.

நகர காங்கிரஸ் குழுவைச் சேர்ந்த 13 உறுப்பினர்கள் தீர்மானத்திற்குச் சாதகமாகவும், இருவர் நடுநிலைமையாகவும், நால்வர் எதிராகவும் இருந்தனர்.

கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த அகில இந்திய தேசிய தொழிற் சங்கக் காங்கிரஸ் தலைவர் வாசவதாவும், பம்பாய் துணைக் கல்வி மந்திரியான திரு. இந்துமதி அம்மையும், கந்துபாய் தேசாய் என்ற பிரபல காங்கிரஸ் கட்சியினரும், இரு மொழி முடிவை ஏற்றுக்கொள்ளும்படி எடுத்துரைத்தனர்.

காங்கிரஸ் குழு கூட்டம் நடந்துகொண்டிருந்தபொழுது, அக்கட்டிடத்தைச் சுற்றி ஆயிரம் பேர்களுக்கு மேல் கூடிக்கொண்டு, 'எங்களுக்கு மகா குசராத் வேண்டும்' என முழக்கமிட்டுக்கொண்டு இருந்தனர்.

பனமா நாட்டின் உரிமைக் குரல்?

"இலண்டனில் நடைபெறும் மாநாடு, சூயஸ் கால்வாய் பிரச்னையில் என்ன முடிவு செய்த போதிலும், பனமா கால்வாய் சம்பந்தமான உரிமை பனமாவையே சேர்ந்ததாகும்,"

என்று, பனமா நாட்டு சர்க்கார் பிரிட்டனுக்கு அறிவித்துள்ளதாம். அன்றியும், இலண்டன் மாநாட்டிற்குப் பனமா அழைக்கப்படாதது பற்றி ஆச்சரியம் தெரிவித்துள்ளதாம்.

கவர்னர் பதவியை விரும்பவில்லையாம்!

மேலும் இரு கவர்னர்கள் விலகிவிடுவார்களாம்

ஆந்திரா கவர்னரும் தொடர்ந்து பதவி வகிக்கமாட்டாராம்

ஒரிசா கவர்னராக இருக்கும் பி. எஸ். குமாரசாமி இராசா, உடல் நலக் குறைவினல் பதவியை விட்டு விலகுவதாகச் செய்தி ஒன்று தரப்பட்டது நினைவிலிருக்கலாம்.

இப்போது, உ. பி. கவர்னர் கே. எம். முன்ஷி, பஞ்சாப் கவர்னர் சி. பி. என். சிங் இருவரும், தங்கள் பதவி காலம் முடிவடைவதற்கு முன் விலகி விடுவரென நம்பப்படுவதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

இப்போது ஆந்திரா கவர்னராக உள்ள திருவேதியும், தொடர்ந்து அப்பதவியை வகிக்க மாட்டாரென்று அதே செய்தி கூறுகிறது.

புதிய ஆந்திர மாநிலத்திற்கு, தான் கவர்னராக இருப்பதற்கு விரும்பவில்லையென்று ஐதராபாத் நிசாம் இந்திய சர்க்காரிடம் தெரிவித்திருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 18—8—'56 சனி

புரிந்த வஞ்சனைக்கு சமாதானமா?

'ஐந்தாண்டுத் திட்டங்களைப் பொறுத்து, ஒவ்வொருவருடைய கோரிக்கைகளையும் கவனித்தாக வேண்டும்; ஆனால் ஒரே நேரத்தில் அல்ல' என்ற பொருள்பட இந்தியத் துணைக் கண்டத்தின் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்கள், மதுரையம்பதியில், தனக்கு நல்கப்பட்ட நல் வரவேற்பு ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'........ஒவ்வொருவருடைய கோரிக்கையும் கவனிக்கப்பட வேண்டியுள்ளது; ஆனல் ஒரே நேரத்தில் அல்ல,' என்று கூறிய அவர், 'இறுதியில் எவரும் புறக்கணிக்கப்படமாட்டார்கள்' என்ற உறுதி மொழியையும் தந்தாராம்!

'ஒவ்வொருவருடைய கோரிக்கையையும் கவனிக்க வேண்டியுள்ளது; இறுதியில் எவரும் புறக்கணிக்கப்படமாட்டார்கள்'—என்ற வாசகங்கள், ஐந்தாண்டுத் திட்டங்கள் போன்ற அபிவிருத்தித் திட்டங்களில் கடந்த காலத்தில் தென்னடு அநியாயமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையைக் கூரைமேல்ஏறிக் கூவுகின்றன.

திரையிட்டு மூடிவிட முடியாத இந்த ஒளிவீசும் உண்மையை மூடி மறைத்துவிட முயற்சித்து, மூக்கறுபட்டுத் தோல்வி மூலையில் உட்கார்ந்திருக்கிற 'பரந்த மனம்' படைத்த 'அகில இந்தியா'க்கள் கொஞ்சம் கண் திறந்து குடியரசுத் தலைவரின் வாசகங்களைப் பார்க்கட்டும்.

தென்னடு அபிவிருத்தித் திட்டங்களில் புறக்கணிக்கப்பட்ட அநீதியைக் கண்டிக்க மறுத்து ஒதுங்கி நின்ற—தென்னட்டு மக்களுக்குத் துரோகம் இழைத்த புல்லர்கள், தென்னடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற அநியாயத்தை, அதிகாரபீடத்தின் உச்சாணித் தட்டிலிருப்போரும் ஒப்புமாறு செய்த ஆற்றல் மிகுந்த திராவிட மக்களின் விடுதலைப் படையில் தாங்கள் அணிவகுக்காமல் போனதற்காக வெட்கித் தலை குனியட்டும்.

இன்னும் இந்த உண்மையை —வடநாடு தென்னட்டிற்கு வஞ்சகம் புரிந்த கொடுமையை ஒப்ப மறுக்கும் கனதனவான்களுக்கு, விழிப்புப் பெற்று வரும் திராவிட மக்கள் தகுந்த பாடம் புகட்டட்டும்.

உண்மையை ஒப்பியுள்ள டாக்டர் இராசேந்திரர், அந்த உண்மை தோன்றுவதற்காகக் காட்டியுள்ள காரணமும் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்கத் தக்கதாகும். தென்னட்டிற்குத் தாங்கள் இழைத்த கொடூரமான அநீதிக்கு அவரது உண்மை ஒப்பலோ, அதற்காகக் காட்டும் காரணமோ, தருகின்ற உறுதி மொழிகளோ தகுந்த சமாதானங்களாகிவிட முடியாது.

'ஒவ்வொருவருடைய கோரிக்கைகளும கவனிக்கப்படவேண்டியிருக்கிறது; ஆனல் ஒரே நேரத்தில் அல்ல' என்கிறார், டாக்டர்!

ஒரே நேரத்தில், ஒரே சீரான அபிவிருத்தி செய்ய முடிய வில்லையாம்—கூறுகிறார், இராசேந்திரர்! 'அதனல்தான் தென்னடு புறக்கணிக்கப்பட்டது' என்ற பொருள் தொக்கி நிற்கிறது, வாசகங்களில்!

ஒரே நேரத்தில் 'பாரதமாதா'வின் புதல்வர்கள் அனைவரையும் வாழ்விக்க முடியவில்லையாம்! ஆனலும், பாரதமாதா ஏகத் தாயாம், இந்தப் புத்திரர்களுக்கு! வேடிக்கையாக இல்லையா இந்த வாதம்?

ஏற்கனவே கூனிக் குறுகி, குடல் காய்ந்து சுரும்பிக் கிடக்கும் தென்னடு என்ற பிள்ளையை வாழ்விக்க இயலவில்லையாம், 'பாரதமாதா'விற்கு! ஆனல், உருண்டு திரண்டு, கொழுத்துப் பூரித்துப் புயங்கள் பெருத்து, கன்னங்கள் உப்பிப் பெருத்துக் கிடக்கும் வடநாடு என்ற குழந்தையையே வாரி அணைத்து, வளமான பொருளெல்லாம் ஊட்டுகிருள் 'பாரத மாதா'! இதற்குக் காரணம், அந்த வடநாடு என்ற பிள்ளையும், 'எனக்கும்வேண்டும்' என்று கேட்கிறதாம்! அதனல்தான், 'ஒவ்வொருவராகத்தானே நான் கவனிக்க முடியும்' என்கிறாராம்! இப்படியெல்லாம்தான் வாதிட்டிருக்கிறார், குடியரசுத் தலைவர்!

'பாரதமாதா' தென்னட்டவரையும் தனது புதல்வர்களாகவே நினைத்திருந்தால், பசித்தழும் அவர்களுக்கல்லவா முதலில் பால்வார்க்க வேண்டும்? பசித்துப் புசித்து உல்லாசமாக விளையாடிக்கொண்டிருக்கும் வடநாட்டவருக்கா பால் வார்ப்பாள்? சாதாரண மாதாக்களே செய்யத் துணியாரே இந்தச் செயலை? 'பாரதமாதா' எப்படிச் செய்தாள்? ஏன் செய்தாள்?

'ஏன் செய்தாள்?' என்ருல், 'தென்னட்டவர் அவளது பிள்ளைகளல்ல; மாருக, திராவிடத் தாயின் பிள்ளைகள்! திராவிடத் தாய், பன்னெடுங் காலமாகவே பாரதத் தாயின் ப்ரம வைரி—மாற்ருந்தாய்! அதனல்தான், தன் காலடியின் கீழ் சிக்கிவிட்ட திராவிடத் தாயின் புதல்வர்களைப் பாரத மாதா வஞ்சித்தாள்'—என்று குடியரசுத் தலைவரின் வாசகங்களுக்கு நாம் வியாக்கியானம் கூறுவது மிகைப்படுத்துவதாகவோ, உண்மைக்குப் புறம்பானதாகவோ இருக்க முடியாது.

முதல் திட்டத்தில் மட்டுமின்றி, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னடு புறக்கணிக்கப்பட்டது, வடவரின் வஞ்சக நெஞ்சத்தை உலகுக்குப் பறைசாற்றிக்கொண்டிருக்கும்போது, 'இறுதியில் எவரும் புறக்கணிக்கப்படமாட்டார்கள்' என்று டாக்டர்தரும் உறுதிமொழியை தென்னட்டு மக்கள் நம்புவதற்கில்லை.

'இந்தி திணிக்கப்படமாட்டாது' என்று அவர்தந்த உறுதிமொழி, வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளால் துச்சமென மதிக்கப்பட்டு, இந்தித் திணிப்பு அசுர வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் கண்ட பிறகுமா, தென்னட்டு மக்கள், தனது இந்த உறுதிமொழியை மதிக்கவேண்டும் என்று அவர் எதிர்பார்ப்பது?

தென்னடு வஞ்சிக்கப்பட்டதற்குச் சமாதானமா?

எல்லாப் பிரதேசங்களையும் ஒரே நேரத்தில் கவனிக்க முடியாதாம்

எந்த ஒரு பிரதேசமும் இறுதியில் புறக்கணிக்கப்படாதாம்

இந்தியாவின் ஒற்றுமை' வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்டதாம்

அணி உவமையால் உண்மைக்குத் திரையிட குடியரசுத் தலைவர் முயற்சி

மதுரை, ஆக. 16—

"ஐந்தாண்டுத் திட்டங்களில் ஒவ்வொரு பிரதேசத்தையும் கவனித்தாக வேண்டும்; ஆனல் ஒரே சமயத்தில் அல்ல; எந்த ஒரு பிரதேசமும் இறுதியாகப் புறக்கணிக்கப்படும் என்ற பயம் உங்களுக்கு வேண்டுவதில்லை"

என்று, மதுரையில் தனக்குத் தரப்பட்ட வரவேற்பு ஒன்றுக்குப் பதிலளிக்கும்போது, குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் குறிப்பிட்டாராம்.

"நமதுஒற்றுமை, வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்டது; ஒரு ஆபரணத்தில் உள்ள ஒவ்வொரு சிறிய கல்லும் மதிப்பும் சௌரவமும் உடையது தான்; ஆனல், அவை ஒவ்வொன்றும் முழு ஆபரணத்தினின்றும் வேறுபட்டதாகும். இந்தியா அதுபோன்ற ஒரு நகைதான்; அந்த நகையில் உள்ள எந்த ஒரு கல்லுக்கும் நாம் தீங்கிழைக்கக் கூடாது; அதில் உள்ள ஒவ்வொரு கல்லும் அதனதன் அழகுக்கும் சேர்த்திக்குமாக அதனதன் இடத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டும்,"

என்றும், அவர் அழகான உபமான உபமேயங்களுடன் ஒற்றுமை உபதேசம் செய்து, 'வடக்கு வேறு—தெற்கு வேறு' என்ற உண்மைக்குத் திரையிட முயற்சித்தாராம்!

தமிழ்நாட்டு மக்களின் மனநிலை குறித்துத் தனக்கு எவ்வளவு 'ஞானம்' இருக்கிறது என்பதைக் காட்டிக்கொள்ளும் வகையில், குடியரசுத் தலைவர் இராசேந்திரர் கூறியதாவது:—

"மாநில புது அமைப்பு விவகாரத்தை ஒட்டி இந்தியாவின் பல பாகங்களிலும் குழப்பங்கள் நிகழ்ந்துள்ளன; தமிழ் நாட்டு மக்களுக்கு அதுபோன்ற பிரச்சினைகள் இப்போது இல்லை யென நினைக்கிறேன். அது போன்ற குழப்பம் எப்போதும் உங்களுக்குவராது என்று நம்புகிறேன்.

"நாட்டினை (இந்தியாவை) நீங்கள் ஒரே நாடு என்று ஒரு சேரக் காண்கிறீர்கள் என்றுதான் நிச்சயமாக நம்புகிறேன். நீங்கள் இந்தியாவின் ஒரு மூலையில் இருக்கிறீர்கள்; அந்த மூலை, நாட்டின் மிகப்பெரிய மூலை!

"நாடு என்ற கண்ணேட்டத்திலிருந்து பார்த்தால், உங்களுக்குப் பெரும்பாரம் இருக்கிறது; ஏனெனில், நாட்டின் முழுபாகமும் உங்களுக்கு வடக்கேயுள்ளது; நீங்கள் தேசப்படத்தைப் பார்த்தால், நாட்டின் உச்சியிலோ அடிவாரத்திலோ நீங்கள் இருப்பது புலனகும். நீங்கள் உச்சியிலிருப்பதனலும், அடிவாரத்திலிருப்பதாலும் உங்கள் பொறுப்புகள் அதிகமே! கால்கள்தான் உடம்பின் முழு பாரத்தையும் சுமக்கவேண்டியிருக்கிறது, என்ருல் தலை அதைவிட அதிகமான பாரத்தைச் சுமக்கவேண்டியுள்ளது. எனவே, நீங்கள் நாட்டை மறக்கவோ அதன் நலன்களைப் புறக்கணிக்கவோ மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்."

'எங்களுக்கு சமாதானம் வேண்டும்'

பிரதமர் சூயஸ் கொள்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

முகமலர்ந்து சிரித்து கையசைத்தார் ஈடன்!

இலண்டன், ஆக. 15—

பிரதமர் அலுவலகத்திற்குத் திரும்பிய பிரிட்டிஷ் பிரதமர் ஈடனை ஐந்நூறு குடிமக்களுக்கு மேல் சூழ்ந்துகொண்டு, 'எங்களுக்குச் சமாதானம வேண்டும்' என முழக்கமிட்டனர்.

அதுகண்டு பிரதமர் ஈடன், பெருங்கோபம் கொண்டு, தனக்கு எதிராக முழக்கமிட்டவர்களைச் சுட்டுத்தள்ளும்படி போலீஸ் படையை ஏவவில்லை; கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி கலைக்கக் கட்டளை பிறப்பிக்கவில்லை; அவர்கள் செயல் இங்கிலாந்தின் சுதந்திரத்திற்கு உலைவைப்பதாகப் புதியஅரசியல் தத்துவத்தைப் பேசவு மில்லை ஆனல், உற்சாகம் கொண்டார்—அகமகிழ்ந்தார் — முகமலர்ந்தார் —முழக்கமிட்டவர்களைத் திருப்தி செய்யும் வகையில் தம் கரங்களை அசைத்தார், பிரிட்டிஷ் பிரதமர் ஈடன்!

பிரதமர் ஈடனின் சூயஸ்கால்வாய் கொள்கையை எதிர்த்து இடதுசாரி தொழிற்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஓர் பொதுக்கூட்டம் நடத்தினர். அந்தக் கூட்டம் முடிந்ததும், அங்கிருந்து நேராக மேற்படி தொழிலாளர்கள் ஈடனை சந்தித்து முழக்கமிட்டுள்ளனர்.

'என் மகனின் உயிர்த் தியாகம்

அகமதாபாத் பெண்மணியின் உருக்கமான வேண்டுகோள்

அகமதாபாத், ஆக. 15—

கண்களில் நீர் ததும்ப, ஒரு கரத்தில் குழந்தை ஒன்றைத் தூக்கிக் கொண்டே 35 வயதான பெண்மணி ஒருவர் இங்கு சுதந்திர தின விழாவையொட்டி தேசியக் கொடியை ஏற்றிவைத்தாரம்.

இவர், தனது 18 வயதுப் பிள்ளையை—கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காளையை கடந்த 8-ந் தேதியன்று போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பலி கொடுத்தவர் என்று தெரியவருகிறது.

துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்ட நிலையில் கொடியேற்றிவிட்டு அந்த அம்மையார் எதும் பேச முடியாத நிலையில், 'என் மகன் புரிந்த தியாகம் வீண் போகாது பார்த்துக்கொள்ளுங்கள்' என்று மட்டும் கூடியிருந்தோரிடை கூறினாராம்.

கூடியிருந்த 25,000 பேரும் உருக்கமான இந்த வேண்டுகோளை ஏற்று, 'திடீரெனத் திணிக்கப்பட்ட இருமொழி பம்பாய் மாநில அமைப்பை எதிர்த்து அமைதியான போர் புரிவோம்' என்று உறுதி மொழி எடுத்துக்கொண்டனராம்!

நாகர் விடுதலை கிளர்ச்சியில் புதிய கட்டம்

மணிப்பூர்எல்லையிலும் கொந்தளிப்பு

இந்திய இராணுவத்தின் எதிர்ப்பு நடவடிக்கை

இம்பால், ஆக. 14—

அசாம் பகுதியில் உள்ள நாகமலையில் மட்டுமே கிளர்ச்சி செய்துகொண்டிருந்த நாகர்களில் ஒரு பகுதியினர், அருகில் உள்ள மணிப்பூர் இராஜ்யத்தின் எல்லைப் பகுதிகளிலும் ஊடுருவியுள்ளனர்.

மணிப்பூர் இராஜ்யத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கிழக்கு எல்லைப்புற இராணுவம், நாகர் கிளர்ச்சிக்காரர்களை எதிர்த்து பெருந்தாக்குதலை நடத்தியது.

இந்தத் தாக்குதலில் இந்திய இராணுவத்திற்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை; கிளர்ச்சியிலீடுபட்டிருந்த நாகர்களே அண்டையிலுள்ள காட்டில் ஓடி ஒளிந்தனர்.

கருத்தறிவிப்பு காரியமாற்றுமா?

புதுடில்லி, ஆக 16—

"நாட்டின் எந்த ஒருபகுதியிலாவது உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டால், சர்க்கார் சேமிப்பிலிருந்து உணவுத் தானியங்களை விநியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதே இந்திய சர்க்காரின் கருத்தாகும்" என்று, மக்கள் சபையில், விவசாய அமைச்சர் குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார்:—

"மாநிலங்களுக்கிடையே உணவுத் தானியப் போக்குவரத்து தாராளமாக இருக்கவேண்டும்; இதில் தடையேதும் இருக்கக்கூடாதென்றும் சர்க்கார் கருதுகிறது."

ஆந்திராவுக்கு மாற்றப்பட்ட தமிழ்ப் போலீசார்

சென்னைக்கு மாற்றுவது பற்றி மந்திரி சுப்பிரமணியம்

சென்னை, ஆக. 16—

1953-ம் ஆண்டில் ஆந்திரம் பிரிந்தபோது, விசேட ஆயுதந் தாங்கிய போலீஸ் படையிலிருந்த பல தமிழர்கள் ஆந்திர மாநிலத்திற்குச் சென்றுவிட்டதாகவும், இவர்களை மீண்டும் தமிழ் நாட்டிற்கு மாற்றுவதற்கு உத்தேசமுண்டா என்றும் சட்டசபையில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு நிதி அமைச்சர் சுப்பிரமணியம் பதிலளிக்கையில் சொன்னார்:—

"சென்னை மாநிலத்திற்குத் திரும்பிவரும் உரிமை அவர்களுக்குத் தரப்படவில்லை; என்றாலும், இதுபற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது; இன்னும் முடிவேதும் செய்யப்படவில்லை; தமிழ்மொழி பேசுவோர் எப்பொழுதுமே தமிழ் நாட்டிலேயே உத்தியோகம் செய்ய வேண்டுமென்று நினைப்பது சரியல்ல; இங்குள்ள மக்கள் தொகையை உத்தேசித்தால் இதனால் இங்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கக்கூடும்."

கே: 'இங்கேயே தமிழர்களெல்லோரும் பணியாற்ற வேண்டுமென்று கூறவில்லை; ஆனால் வேறு மாநிலங்களுக்கு மாற்றப்பட்டுள்ள தமிழர்களின் நலனைப் பாதுகாப்பதும் இந்தச் சர்க்காரின் கடமை அல்லவா?'

ப: 'எந்த மாநில மக்களும் வேறு எந்த மாநிலத்திலும் பணியாற்றலாம்; அந்தந்த மாநிலங்களிலுள்ள மக்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க அந்தந்த மாநில சர்க்கார்கள் கடமைப்பட்டுள்ளன; நாட்டின் எந்தப் பகுதியிலும் ஒரு குறிப்பிட்ட மொழியினர் பணியாற்றுவதற்கு இடையூறுகள் இருக்க முடியாது.'

கே: 'மாதம் ரூ 30 அல்லது ரூ 40 ஊதியம் பெறும் போலீஸ் சிப்பந்திகள், சொந்த ஊரைவிட்டு வெகுதூரத்தில் எவ்வாறு பணியாற்றுவது இயலும்?'

ப: 'இது சங்கடமான நிலைதான்; என்றாலும், அதைவிட வேலையில்லாமலேயே இங்கு வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அது மேலும் கஷ்டமானது அல்லவா?'

'பண்டித சுக்லா போன்ற வடநாட்டவர் பிதற்றுவதை ஜனாதிபதி கண்ணுற்ருரா?'

'ஒரே ஆட்சி மொழியை விரும்பாத உரிமை உணர்வு கொண்ட மக்கள் எல்லாமொழிகளுக்கும் ஒரே எழுத்தை ஏற்பரா?'

'அடிப்படையிலேயே தென்னாட்டவர் மாறுபடுகின்றனர்'

கதம்பக் கொச்சைப் பேச்சு அகில இந்திய மொழியாக்கப்படுவதை எதிர்க்கின்றனர்!

இந்தி பற்றிய குடியரசுத் தலைவர் கருத்துக்கு எதிர்ப்பு

"சென்னை நகரத்திற்கு ஒன்பது மைல் தூரத்திலுள்ள சாலிக்கிராமத்தில், ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தைத் தொடங்கி வைக்கும்போது, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திரப்பிரசாத் இம்மாகாணத்தில் தாம் இந்தி மொழியில் பேச விரும்பாத காரணத்தைக் கூறியிருக்கிறார். அந்நிலையத்தின் சார்பாகத் தம்மை வரவேற்றுப் பேசியவர் இந்தியில் சொற்பொழிவு நிகழ்த்தியதால், அம்மொழியில் பேசவேண்டுமென்ற தவருன எண்ணம் தமக்கு முதலில் தோன்றியதாகவும், ஆனால் இந்தியைத் தென்னிந்திய மக்கள் மீது கட்டாயமாகச் சுமத்தும் குற்றச்சாட்டிற்குத் தாம் இலக்காக நேருமென்று அஞ்சியே அவ்விதம் செய்யவில்லையென்றும், அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

"அவருடைய அரசியல் பண்பையும், பெருந்தன்மையான குணத்தையும் நாம் மிகவும் பாராட்டுகின்ரேம். ஆனால், அச்சொற்பொழிவின் பிற்பகுதியில் தென்னிந்திய மக்களுக்கு அவர் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிருர். 'ஆங்கிலத்தைக் கற்றுணர்ந்திருப்பதைப் போலவே, இந்தியையும் அவர்கள் நன்ருகப் பயின்றுகொள்ளவேண்டும்' என்று அவர் தெரிவித்திருக்கிருர். அப்போதுதான், தம்மைப் போலவும், சென்னை கவர்னர் பிரகாசாவைப் போலவும் தென்னிந்தியர்கள் வட இந்தியர்களோடு சமமான தன்மையில் போட்டியிடலாமென்று அவர் கருதுகின்ருர். இதனுடைய அடிப்படைக் கருத்தை தென்பகுதி மக்கள் ஒப்புக்கொள்ளவேயில்லை; எப்படியாவது இந்தி மொழி, அனைத்திந்திய ஆட்சி மொழியாக நிலைநிறுத்தப்படப் போவதால், அதைப் பயின்று கொள்வதே சிறந்தது என்பதே அக்கருத்தாகும்.

"சொந்த எழுத்தும் இலக்கணமும், சிறப்பான இலக்கியமுமில்லாத வடநாட்டின் ஒரு பகுதிக் கலப்புக் கதம்பக் கொச்சைப் பேச்சை, பழம் பெரும் புராதனச் சிறப்பு மொழிகளுள்ள இத்துணைக்கண்டத்தில், அனைத்திந்திய ஆட்சி மொழியாவதற்குச் செய்யும் முயற்சியைத் தொடக்கத்திலிருந்து இதுகாறும், பல ஆண்டுகளாகத் தென்பகுதி மக்கள் எதிர்த்து வந்திருக்கிருர்கள்.

"மத்தியப் பிரதேச முதலமைச்சர் பண்டித சுக்லா, மொழிப் பண்பே இல்லாத ஒரு மொழியை நாட்டு மக்கள் அனைவர்மீதும் சுமத்துவதோடுகூட, அம்மொழி இந்தியாவின் பதினன்கு மொழிகளுக்கும் பொது எழுத்தாக இருக்கவேண்டும் என்றும் கூறியிருக்கிருர்! மொழி ஆதிக்க வல்லாட்சியாளர்களின் மன வலிமைதான் என்னே!! 'உலக வரலாற்றிலேயே, ஒரே ஆட்சி மொழி இல்லாத சுதந்திர நாடே கிடையாது. ஒரே ஆட்சி மொழியிருப்பது நாட்டின் ஒற்றுமைக்கு இன்றியமையாதது. இக்காரணத்தையொட்டியே, அனைத்திந்திய ஆட்சி மொழியாக இந்தியை ஏற்படுத்தியிருக்கிருர்கள்'—என்று பண்டித சுக்லா கூறியிருக்கிருர்.

"உலக வரலாற்றை அவர் மீண்டும் கவனித்துப் பார்த்தால், பல ஆட்சி மொழிகளுள்ள சுவிட்சர்லாந்து சுதந்திர நாடாக விளங்கி வருவது புலப்படும். சுவிட்சர்லாந்தில், செர்மானியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், இத்தாலியர்கள், உரோமான்சினர்கள் ஆகிய நான்கு மொழியாளர்கள் இருக்கிருர்கள். 100-க்கு 72 எண்ணிக்கையுள்ள செர்மானிய மக்கள் தம்முடைய மொழியை சுவிட்சர்லாந்தின் ஒரே ஆட்சி மொழியாகச் செய்துவிடவில்லை. அதற்கு மாருக, மற்ற மூன்று மொழிகளையும் நாட்டின் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள். யூகோசுலேவியாவில் மூன்று ஆட்சி மொழிகள் இருக்கின்றன. கனடாவில் இரண்டு ஆட்சி மொழிகள் காணப்படுகின்றன; பெல்சியத்திலும் அவ்வாறே; ருசியாவில் ஆறு மொழிகளுக்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம், சுதந்திர நாடுகளல்லவோ?

"பண்டித சுக்லாவின் கருத்தை டாக்டர் இராசேந்திர பிரசாத் போன்ற தலைவர்கள் கவனிக்க வேண்டுமென்று விரும்புகின்ரேம். ஒரே ஆட்சிமொழியை விரும்பாத சுதந்திர உணர்ச்சியுள்ள மக்கள், ஒரே எழுத்தையா எல்லா மொழிகளுக்கும் விரும்புவார்கள்? இது போன்ற கருத்துக்கள், இந்தியாவில் ஒற்றுமையை உருவாக்குவதற்கு மாருக, ஒருவாறு உள்ள ஒற்றுமையையும் அடியோடு ஒழிப்பதற்குத்தான் துணைபுரியும்."

—இவ்வாறு, 'தமிழ் நாடு' தினஇதழ் 15—8—56-ம் நாளன்று எழுதியுள்ள 'மொழி ஆதிக்க முயற்சி' என்ற தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

வட சென்னை குறள் நெறி பிரச்சாரக் கழகம்

10—8—56 மாலை மேற்படி கழகத்தில், தோழர் மு கி மூர்த்தி தலைமையில் கழகத் திறப்பு விழா நடைபெற்றது. நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆசிரியருக்குக் கடிதம்:

வெற்றிலை உற்பத்தியாளர்கள் வேண்டுகோள்

ஐயா,

சேலம் மாவட்டத்தில் உள்ள பொத்தனூர், வேலூர், பாண்டமங்கலம் பகுதிகள் வெற்றிலை உற்பத்திக்குப் பன்னெடுங்காலமாகவே பெயர் பெற்ற செழிப்பான பகுதிகளாகும் கவி சுப்பிரமணிய பாரதியார், 'கங்கை நதிப் புறத்துக் கோதுமைப் பண்டம் காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்' எனப் புகழ்ந்து பாடியதும் இப்பகுதி வெற்றிலையையே! இந்த வெற்றிலையை இந்தியாவின் பெருநகரங்களாகிய சென்னை, ஆந்திரா, ஆமதாபாத், பம்பாய், பாகிஸ்தான், பூனா, நாகபுரி இங்கெல்லாம் ஏற்றுமதி செய்யப்படும் உயர்ந்த சரக்காகும். இதன் ஏற்றுமதி—இறக்குமதிகளினுல் அரசாங்கத்திற்கும், இரயில்வேய்க்கும் நல்ல வருமானம் கிடைத்து வந்தது. மேலும் இவ்வட்டாரத்தில் இத்தொழிலினுல் இரண்டு இலட்சத்திற்குமேற்பட்ட ஆண்கள், பெண்கள் உள்ளிட்ட கடுத்தர மக்களுக்கு வேலை கிடைத்து வந்தது; மக்களும் நல்ல வாழ்வு வாழ்ந்து வந்தார்கள்.

ஆனல், கடந்த ஐந்து ஆண்டுகளாக இப்புனிதமான வெற்றிலைக் கொடியில் பூச்சிவிழுந்து, காலரா போன்ற ஒருவித தொத்துவியாதியால் பீடிக்கப்பட்டுப் பாழாகி வருகின்றன. இதையே நம்பி வாழ்ந்த ஏராளமான விவசாயக் குடும்பங்கள் வீழ்ச்சியுற்றதோடல்லாமல், பெரிதும் தொல்லைக்கு ஆளாக்கப்பட்டன. இது குறித்து இவ்வட்டாரத்திலிருந்து சில பிரமுகர்கள் சென்னை சென்று மந்திரிகள் பலரையும் நேரில் பார்த்து நிலைமையை விளக்கினுர்கள். மேலும் இப்பகுதிக்கு 25-9-54-ல் விவசாய அமைச்சர் கனம் பக்தவத்சலமும் 1-1-56-ல் முதலமைச்சர் கனம் காமராசரும் வந்திருந்தபொழுது வாழ்விழந்து, துயர்மிகுந்த விவசாயிகள், பூச்சிகளை அழிக்கவும், மாதிரிப் பண்ணை அமைக்கவும் உதவி புரிய வேண்டுமென்ற வேண்டுகோளையும் நேரில் கேட்டுக்கொண்டார்கள்; அமைச்சர்களும் ஆவன செய்வதாக வாக்குறுதி அளித்தார்களே தவிர, நடைமுறையில் எந்த விதமான பரிகாரமும் செய்ததாகத் தெரியவில்லை. ஜனநாயக சர்க்காரில் இப்பகுதி மக்கள் தங்களின் பிரதான கோரிக்கையை முறைப்படி தெரிவித்துக் கொண்டார்கள்; —கேட்டுக்கொண்டார்கள்; ஆனல் சர்க்காரோ அலட்சிய நிலையில் தான் உள்ளனர்.

ஒரே தொழிலை நம்பி வாழ்ந்து வந்தவர்கள் இன்று நாசமடைய வேண்டியவர்களாக ஆக்கப்படுகிருர்கள். அவசியமும், அவசரமுமான இந்தப் பாதுகாப்பைத் தருவதைவிட முக்கிய வேலை விவசாய மந்திரிக்கு வேறு என்ன இருக்க முடியும்? எனவே, வாழ்விழந்து பாழ்பட்டு இருக்கும் இப்பகுதி வெற்றிலை விவசாயிகளுக்கு வெற்றிலைக்கு மாதிரிப் பண்ணை அமைத்து மக்களுக்குப் புதுவாழ்வு தருமாறு வாழ்விழந்த மக்களின் சார்பாகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஓ. எம். சுப்பிரமணியன்
பொத்தனூர்

விசைத்தறித் திணிப்புக்கு காஞ்சி நெசவாளர் எதிர்ப்பு

காஞ்சிபுரம், ஆக. 15—

விசைத்தறிகளைப் புகுத்துவதை எதிர்த்து இங்கு ஒரு கண்டனக் கூட்டம் நடைபெற்றது. விசைத்தறிகளையும், தானே இயங்கும் தறிகளையும் இத்தொழிலில் புகுத்துவதால், கைத்தறித் தொழில் பாதிக்கப்பட்டுவிடும் என்றும், ஒவ்வொரு கைநெசவுத் தொழிலாளிக்கும் சர்க்கார், குறைவான செலவில் நூல் கொடுக்கச் செய்வதற்கான தகுந்த உறுதிகள் வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டதுடன், சர்க்காரின் துணி ஆலைக் கொள்கைகளை எதிர்த்துத் தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில், வருகிற 23-ந் தேதியன்று தமிழ் நாடெங்கிலும் 'கண்டன நாள்' மேற்கொள்வதெனத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

★

பட்டிமார்ப்பு நெசவாளர் எதிர்ப்பு

ஆனகாபுத்தூர், ஆக. 17—

14—8—56-ல், பட்டிமார்ப்பு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கக் கூட்டம் தோழர் சி. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தமிழ் நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கப் பொதுக் காரியதரிசி திரு. கே. எஸ். பார்த்தசாரதி அவர்கள், இம்மாதம் 11, 12-ந் தேதிகளில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தமிழகக் கைத்தறி நெசவாளர் பிரதிநிதிகள் கூட்டத்தின் முடிவுகளையும், மாநிலத் தொழில் மந்திரி எம். பக்தவத்சலம் அவர்களைப் பேட்டி கண்டு பேசியதையும் விளக்கி, இந்திய சர்க்காரின் புதிய கைத்தறித் துணிக் கொள்கையைக்கண்டித்தும்பேசினர்

பின்னர், கைக்குட்டை ஏற்றுமதி வியாபாரத்தை சர்க்கார் ஏற்று நடத்த வேண்டுமென்றும், 'மார்க்கெட்டிங் சொஸைட்டி' அமைத்துத் தரவேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர், தோழர் டி. எஸ் அர்த்தநாரி அவர்கள் விசைத்தறி புகுத்தும் திட்டத்தைக் கண்டித்தும், அதன் கேடுகளை விளக்கியும் பேசினுர்; தோழர் எம். பாலையா நன்றி நவின்ருர்.

திராவிடஸ்தான் கோரிக்கை பற்றி மீண்டும் வினேபா

சேலம், ஆக. 16—

சேலம் மாவட்டத்தில் தற்போது சுற்றுப்பயணம் செய்துவரும் ஆச்சாரியா வினேபா பாவே அவர்கள், 'திராவிடஸ்தான் கோரிக்கையானது நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்று' என்று குறிப்பிட்டாராம்.

"அன்பினுலும் பாசத்தினுலும் தான் 'உலக ஒற்றுமை' நிர்மாணிக்கப்பட முடியும். விஞ்ஞானம், ஆக்கவேலைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்," என்றும் அவர் 'உபதேசம்' புரிந்திருக்கிருர்!

இந்தியாவில் 1955-ல், ரூ. 1,20 000 மதிப்புள்ள காகிதத் தயாரிப்பு இயந்திர சாதனங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

வெற்றிலைப் பயிர்த் தொழிலை நம்பி வாழுபவர்கள்

சென்னை மாநிலத்தில் 10-இலட்சம் பேர்

சர்க்கார் பாதுகாப்புத் தரவேண்டிய அவசியம் வற்புறுத்தப்படுகிறது

திருச்சி, ஆக. 17—

"சென்னை மாநிலத்தில் 10 இலட்சம் மக்கள் வெற்றிலைப் பயிர்த் தொழிலையே நம்பி வாழ்பவர்களாக இருக்கின்றனா; அவர்கள், அத்துடன் மிளகும் மற்றும் சில காய்கறி வகைகளையும் பயிர் செய்து பிழைத்துவருகின்றனர். இந்த வியாபாரத் துறையை மட்டுமே நம்பித் தங்கள் வாழ்நாளை கழித்து வரும் அம்மக்களுக்குச் சர்க்கார் தேவையான—தகுந்த பாதுகாப்புகளைத் தராவிட்டால், அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாக்கப்பட்டு கதிகலங்க நேரிடும்; பல ஆராய்ச்சிச் சாலைகள் அமைத்து, வெற்றிலைப் பயிர்த் தொழில்கள் விருத்தி செய்யப்பட வேண்டும்; இதற்கிடையில் சர்க்கார், 'மாதிரி' வெற்றிலைப் பயிர்த் தோட்டங்களையும் ஏற்படுத்தி ஆராயவேண்டும்," என்று, கடந்த ஞாயிறன்று திருச்சி லால்குடியில் நடைபெற்ற தமிழ் நாடு வெற்றிலைப் பயிர்த்தொழிலாளர் மாநாட்டில் பேசும்போது திரு. சூரியநாராயணன் குறிப்பிட்டு விட்டு மேலும் பேசியதாவது:—

"வெற்றிலைகளை இரயில்வேக்கள் மூலம் கொண்டு செல்வதில் மிகுந்த காலதாமதம் செய்யப்படுகிறது. இத்தகுக் காலதாமதங்களின் விளைவு, வெற்றிலை வியாபாரிகளுக்குமட்டுமின்றி, வெற்றிலைப் பயிர்த் தொழிலாளர்களுக்கும் பெருத்த கஷ்டத்தை உருவாக்குகிறது. இந்த காலதாமதம் எவ்வகையிலும் நீக்கப்படவேண்டும்."

சர்க்கார், வெற்றிலைப் போக்குவரத்தில்ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்க்க, விரைவான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தித் தர தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

கேள்விக்குப் பதில் கூருமல் மக்கள்சபையில் மந்திரிகள் மவுனம்!

பதிலிறுக்குமாறு சபைத் தலைவர் உத்திரவு

இரயில் பெட்டித் தயாரிப்புச் செலவு பற்றி விளக்கம்

புதுடில்லி, ஆக 17—

"பெங்களூரிலுள்ள இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையில் கட்டப்படும் இரயில்வே 'கோச்'சுகளைவிட, சென்னை—பெரம்பூர் 'கோச்' வண்டித் தொழிற்சாலையில் கட்டப்படும் வண்டிகள் மலிவானவைகளா?"

என்று, மக்கள் சபையில் நரசிம்மன் எனும் உறுப்பினர் ஒருவர் கேள்வி கேட்டிருக்கிருர்.

அக்கேள்விக்கு, அமைச்சர்களோ மற்றெவருமோ பதில் கூருமல் சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டனர்.

உடனே மக்கள்சபைத் தலைவர், "கேட்ட கேள்விக்குச் சர்க்கார், 'உண்டு—அல்லது இல்லை' என்று பதிலிறுக்க வேண்டும்," என்று பணித்திருக்கிருர்.

தலைவரின் கட்டளைக்குப் பின்னர், பாராளுமன்றச் செயலாளர் ஷா நவாஸ்கான் பதிலளிக்கையில், 'சென்னை பெரம்பூர் கோச் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் வண்டியின்செலவு ரூ. 1,80,000-த் தாடறு, அதற்குத் தேவையான பெஞ்சுகள் போன்றவைகளுக்கு ரூ. 60,000 செலவாகிறது; ஆனால், பெங்களூர் விமானத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் கோச் வண்டி ஒன்றுக்கு சுமார் ரூ. 1,40,000 மட்டுமே செலவாகிறது" என்று குறிப்பிட்டிருக்கிருர்.

அமைச்சரின் பதிலைத் தொடர்ந்து சபைத் தலைவர், 'உறுப்பினர்கள் சாவதானமாகவே இதுபற்றி முடிவு செய்யட்டும்' என்றுகூறி, அடுத்த கேள்விக்கு அனுமதித்தாராம்.

மக்கள் சபை முடிவுக்கு எதிராக உறுப்பினர் கிளர்ச்சி செய்யலாமா?

கைதாகியுள்ள எச். வி. காமத் நடவடிக்கை குறித்து சபை ஆலோசிக்குமாம்

மக்கள் சபை உறுப்பினர் திரு. எச். வி. காமத் அவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தமக்கு அகமதாபாத் மாவட்ட மாஜிஸ்திரேட்டிடமிருந்து தகவல் வந்ததாக சபைத் தலைவர் கூறினபோது, எம். எல். திரிவேதி என்ற காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர்; 'மக்கள் சபையின் முடிவுகளை எதிர்த்து சபை உறுப்பினர் ஆர்ப்பாட்டங்களிலும் கிளர்ச்சிகளிலும் ஈடுபடலாமா?' என்றும், 'அவ்வாறு செய்வது ஜனநாயகக் கொள்கைக்கு ஒத்ததுதானு?' என்றும் வினவினுராம்.

'இதுபற்றி சபை, சாவதானமாக ஆலோசிக்கும்' என்று தலைவர் விடையிறுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

பஞ்சாயத்து, நகர...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வகையிலும், வீரம்கம் முனிசிபாலிட்டி உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் இராஜினுமாக் கடிதத்தைச் சமர்ப்பித்துவிட்டிருக்கின்றனர்.

இதுபோலவே, கடந்த ஏழு நாட்களில், குசராத்தின் பல பாகங்களிலுமுள்ள எல்லா பஞ்சாயத்துக்கள், முனிசிபாலிட்டிகள், காங்கிரஸ் சமிதிகள் ஆகியவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பல உறுப்பினர்களும் தங்கள் இராஜினுமாவைச் சமர்பித்துவிட்டிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இவர்களைத் தவிர, பம்பாய் மாநில சட்டசபைக்கு அகமதாபாத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களும்கூடத் தங்கள் பதவிகளை இராஜினுமாச் செய்துவிட்டனராம்.

இதே காரணத்திற்காக, பரோடா தொகுதியைசசேர்ந்த மக்கள்சபை சுயேச்சை உறுப்பினர் ஒருவரும் தம் மக்கள்சபை உறுப்பினர் பதவியைத் துறந்துவிட்டிருக்கிருர்.

மேகசனு தொகுதியைச் சேர்ந்த மக்கள்சபைக் காங்கிரஸ் உறுப்பினரும்கூட தம்முடைய இராஜினுமாவை மகாகுசராத் வித்யார்த்த சமிதியிடம் சமர்ப்பித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

'பம்பாய் இருமொழி மாநில அமைப்பிற்கு ஆதரவாகப் போலீசார் சிலரிடமிருந்து கையெழுத்து வாங்கியிருப்பதாக, அகமதாபாத்தைச் சேர்ந்த பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர் ஒருவர் கொடுத்தத் தகவல் பொய்யானதும் — விஷமத்தனமானதுமாகும் என்று, பம்பாய் சர்க்கார் பத்திரிகைக் குறிப்பொன்று கூறுகிறது.

ஏ. கே. கோபாலன் கைதுசெய்யப்பட்டார்

'உண்ணுநோன்பு' மேற்கொண்டார்?

அகமதாபாத் மாவட்ட மாஜிஸ்திரேட்டால் பிறப்பிக்கப்பட்டிருந்தத் தடையுத்தரவை மீறியதற்காகக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரான ஏ. கே. கோபாலன் எம். பி., அகமதாபாத்திலுள்ள குசராத் கம்யூனிஸ்டுக் கட்சி தலைமைக் காரியாலயத்தில் கைது செய்யப்பட்டிருக்கிருர் என்று செய்திகள் அறிவிக்கின்றன.

கைதுசெய்யப்பட்ட அவர், ஜாமீனில் விடுதலைபெற மறுத்து, 'உண்ணுநோன்பு' மேற்கொண்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

குசராத் முழுமையிலும் நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிப் பிரயோகங்கள், மற்றும் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தவேண்டுமென்ற கோரிக்கைக்காக ஒரு 'தீவிர இயக்கம்' உருவாக்கப்பட வேண்டுமென்று அவர், தாம் விடுத்திருந்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருந்தாராம்.

க. அன்பழகன் நிகழ்ச்சிகள்

ஆக. 19 : காலை—பரகனூர்
மாலை—விருத்தாசலம்
20 : காலை—வட்டத்தூர் (சிதம்பரம் வட்டம்)
மாலை—தம்மம்பட்டி (ஆத்தூர் வட்டம்)
24 : எட்டுகுடி (தஞ்சை மாவட்டம்)

'போனஸ்' தகராறின் விளைவு

700 அலுமினியம் தொழிலாளர் வேலை நிறுத்தம்

எர்ணுகுளம், ஆக. 17—

'போனஸ்' பிரச்சினை சம்பந்தமாக எழுந்த தகராறின் விளைவாக, ஆலவாய இந்திய அலுமினியம் நிறுவனத்தில், கடந்த நான்கு நாட்களாக 700 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனராம்.

கழகக் கூட்டம்

★

கரூர் :
முனிசிபல் பஸ் நிலையம்
19—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
இரா. வைரப்பெருமாள் எம். சி.
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
முருகேசனுர்

சேலம் சிறப்புக் கூட்டத்தில் அண்ணு

20-8-56 காலை 10-மணிக்கு, அம்பிகா டாக்கீசில், தோழர் என். முத்துசாமி தலைமையில், சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும்.

அண்ணு அவர்களும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் பேசுவர்.

நன்கொடை : ரூ. 1, அணு 8.

சிறப்பு சொற்பொழிவு கூட்டத்தில்

ஈ. வெ. கி. சம்பத்

19-8-56 காலை 9-30 மணிக்கு சென்னை — வண்ணை தியாகராயர் கல்லூரியில், கல்லூரி நுண்கலை மன்றச் சார்பில் நடைபெறும் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் சொற்பொழிவாற்றுவார்.

நன்கொடை : ரூ 1, அணு 8

பொத்தனூருக்கு

பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

வருகை

★

வரவேற்பு—பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள்

20-8-56 மாலை 6 மணிக்கு, பொத்தனூர் திரு. வி. க. திடலில், தோழர் வி. காளியப்பன் தலைமையில் நடைபெறும் கழகப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் வி. சிவப்பிரகாசம், இரா. செகநாதன், வி. ஏ. இராமநாதன், கு. தங்கசாமி ஆகியோர் பேசுவர்.

அன்று மாலை 3 மணிக்கு பொதுச்செயலாளர் அவர்கள், நோயால் பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடிக் காலைப் பார்வையிடுவார்.

மாலை 4 மணிக்கு, வேலூர் ஊராண்மைக் கழகச் சார்பில் பொதுச்செயலாளர் அவர்களுக்கு வரவேற்பு வழங்கப்படும்.

மாலை 4-30 மணிக்கு வேலூர் வ. உ. சி. மைதானத்திலிருந்து தோழர் வி. ஏ. இராமநாதன் தலைமையில் சைக்கிள் ஊர்வலம் நடைபெறும்.

தேவிகுளம், பீர்மேடு இயக்க வழக்கு ஒத்திவைப்பு

வழக்கை நடத்த நடவடிக்கைக் குழு தேர்வு

தேவாரம், ஆக. 15—

சர்வ கட்சிக் கூட்டணியின் முடிவிற்கிணங்க தேவிகுளம், பீர்மேடு சம்பந்தமாகச் சென்ற பிப் 20-ல் நடைபெற்ற அர்த்தாலின்போது கைது செய்யப்பட்ட தேவாரம், பண்ணைப்புரம், கோம்பை தோழர்கள் 58 பேர் மீது தொடரப்பட்ட வழக்கு சம்பந்தமாக 14-8-56-ல் உத்தமபாளையம் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வாய்தா போட்டு, மீண்டும் 31-8-56-ம் தேதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கை நடத்துவதற்காகப் பெரியகுளம் தாலுகா சர்வ கட்சிக் கூட்டணியின் சார்பில் எஸ். எஸ். கணேசன் தலைவராகவும், ஆர். வெள்ளைச்சாமி செயலாளராகவும், ஆர். சந்திரசேகர பாண்டியன் பொருளாளராகவும், ஜி. கந்தசாமி, எஸ். எம். கணபதி, டி. எஸ் சுப்பையா, இராசகோபால் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் கொண்ட நடவடிக்கைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. (ச. கி)

கம்யூனிஸ்டுகளின் புதிய குறிக்கோள்

'கொள்கை நிலைமை' குறித்து பண்டித பந்த் விளக்கம்

புதுடில்லி, ஆக 17—

"மார்க்சிசம், லெனினிசம் ஆகியவைகளுக்குப் பதிலாக, இப்போது நமது கம்யூனிஸ்டுகளின் முக்கியக் குறிக்கோளாக 'மொழிவாரித்துவம்' ஆகிவிட்டதுபோல் எனக்குத் தெரிகிறது. தங்களுடைய சொந்தக் கருத்துக்களை மாற்றிக்கொள்ள அவர்களுக்கு உரிமையும் சுயாதீனமும் உடையவர்களே; அவர்கள் எதை வேண்டுமானுலும் ஒப்புக்கொள்ளட்டும்; ஆனால், என்னைப் பொறுத்தவரையில், மொழிப் பிரச்சினை கவனிக்கப்படவேண்டிய ஒன்றே என்றுலும்கூட, அதையும் விட அதிகமான அளவு முக்கியத்துவம் பெற்றப் பிரச்சினைகள் வேறு இருக்கின்றன என்பதேயாகும்,"

என்று, பீகார் - வங்க மாநில மசோதா குறித்துப் பேசுகையில், மத்திய உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் அவர்கள், கம்யூனிஸ்டுகளின் 'கொள்கை நிலையாமை' குறித்துக் குறிப்பிட்டிருக்கிருர்!

திருமணம்

19—8—56 காலை 7 மணிக்கு, சென்னை — திருவொற்றியூர் அடுத்த மணலிகிராமம், கீழண்டை வீதி, எண் 2/96 இல்லத்தில், தோழர் சி. அரங்கநாதன்—தோழியர் என். ரமணி திருமணம், தோழியர் அலமேலு-அப்பாதுரை தலைமையில் நடைபெறும்; தோழர் மா. இளஞ்செழியன் வாழ்த்துரை வழங்குவார்.

பவானி தொகுதி தி. மு. கழகக் குழு

"19-8-56 காலை 10 மணிக்கு, ஈரோடு தோழர் சம்பத் அவர்கள் இல்லத்தில், பவானி தொகுதிக் குழுக் கூட்டம் நடைபெறும்.

சித்தூர் மாவட்ட தி. மு. கழகச்

செயற்குழு கூட்டம் ஒத்திவைப்பு

"சித்தூர் மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 7—9—56-க்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது; தோழர் க. அன்பழகன் அவர்கள் முன்னிலையில், வங்கனூரில் நடைபெறும். பிரதிநிதிகள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, சித்தூர் மாவட்டச் செயலாளர் தோழர் கே. பார்த்தசாரதி அறிவிக்கிருர்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

ஆக. 20 : காலை—குன்னத்தூர்
மாலை—பொத்தனூர்
21 : ஏ. மேட்டூர்
22 : விழுப்புரம்

மதுக்கூரில் தமிழ் இயக்கத் திறப்பு விழா

19-8-56-ல், மதுக்கூர் கலைமணி அரங்கில், மேற்படி இயக்க திறப்பு விழா திரு ந. இராமநாதன் தலைமையில் நடைபெறும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் திறப்புரை ஆற்றிப் பேருரை வழங்குவார்.

முகவரி மாற்றம்

"சென்னை 8-வது வட்ட தி. மு. கழகப் பணிமனை, எண் 1, குப்பய்யர் தெருவிலிருந்து, 'எண் 23, ஜிண்டா சாயபு தெரு, சென்னை-1' என்ற முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது," என்று, செயலாளர் சோ சுந்தரம் அவர்கள் அறிவிக்கிருர்.

கட்சியின் சொத்து பறிமுதலாகிறது!

அடிப்படை கொள்கைகட்கு அபாயம் விளைவிக்கிறதாம்!

பான், ஆக. 17—

சனநாயகச் சுதந்திரத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு அபாயம் விளைவிப்பதாகவும், சர்க்காரைக் கவிழ்ப்பதற்கு முயற்சிப்பதாகவும் மேற்கு ஜெர்மனி கம்யூனிஸ்டு கட்சி பற்றி பெடரல் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பையொட்டி கம்யூனிஸ்டு கட்சி கலைக்கப்படும்; அதன் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும்.

'கம்யூனிஸ்டு கட்சி சட்ட விரோதமானது' என்று சர்க்கார் அறிவித்துள்ளது.

ச. வேதநாயகனுர் நினைவு விழா

சென்னை, ஆக. 18—

தமிழில் முதல் நவீனமான 'பிரதாப முதலியார் சரித்திர'த்தின் ஆசிரியரும், தமிழ் உரைநடையின் முன்னேடியும், தமிழ் மறுமலர்ச்சியின் தூதுவரும், இசைப் பெரும் புலவரும், கீர்த்தனசிரியருமான மாயூரம் முன்சீப் ச. வேதநாயகனுரின் நினைவுவிழா, நேற்றுமாலை 6-15 மணி அளவில், சென்னை ஒய். எம். சி. ஏ. (எஸ்பிளனேட்) பட்டி மன்றத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு திரு. சீனிவெங்கடசாமி தலைமை வகித்தார்.

தலைவர் முன்னுரைக்குப் பின் பேராசிரியர் க. அன்பழகன், வேதநாயகனுரின் தமிழ்த்தொண்டு பற்றி விரிவாகப் பேசினுர்.

பின்னர், தோழர்கள் மா. சு. சம்பந்தம், ஐ மாயாண்டி பாரதி ஆகியோர் சிறிதுநேரம் பேசியபின்னர் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், வேதநாயகனுர் நினைவு விழாவின் அவசியம் குறித்தும், அவரது காலத்து தமிழ்—தமிழர் நிலைபற்றியும், தற்காலத்தில் தமிழ் உணர்ச்சி வளர்ந்துள்ள விதம்பற்றியும் விரிவுரையாற்றினுர்.

தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

பட்டிமன்றம் இதுவரை காணுத அளவு திரளான மக்கள் விழாவில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.